மாலை
எக்ஸ்பிரஸ்
MAALAI EXPRESS
மாலை நாளிதழ்
மாநிலம் பயனுற!

# நீட் சூப்பர் ஸ்பெஷாலிட்டி தேர்வில் அகில இந்திய அளவில் ஜிப்மர் மாணவி முதலிடம் பெற்று சாதனை

புதுச்சேரி, பிப். 5-

நீட் சூப்பர் ஸ்பெஷாலிட்டி 2025 தேர்வில் அகில இந்திய அளவில் ஜிப்மர் மாணவி முதலிடத்தை பிடித்து சாதனை படைத்துள்ளார்.

நீட் சூப்பர் ஸ்பெஷாலிட்டி நுழைவுத் தேர்வு கடந்த டிசம்பரில் நடந்தது. அறுவை சிகிச்சை பிரிவில் அகில இந்திய அளவில் முதல் இடத்தை பெற்றுள்ள ஜிப்மர் மாணவி டாக்டர் ராஜலட்சுமியை ஜிப்மர் நிர்வாகம் பாராட்டியுள்ளது.

டாக்டர் ராஜலட்சுமி ஜிப்மரில் எம்.பி.பி.எஸ்., (2015 ஆண்டு) படிப்பை முடித்தவுடன், பொது அறுவை சிகிச்சையில் எம்.எஸ்., (2022– 24) பட்டம் பெற்றுள்ளார்.

இதனைத் தொடர்ந்து, செப்டம்பர் 2024 முதல் பிப்ரவரி 2025 வரை ஜிப்மரில் மூத்த பயிற்சி மருத்துவராக பணியாற்றியுள்ளார். முதுநிலை பட்டப்படிப்பு பயிற்சிக் காலத்தில், டாக்டர் ராஜலட்சுமி சிறப்பான கல்வித் திறனை வெளிப்படுத்தி, இறுதி முதுநிலை பட்டப்படிப்பு பல்கலைக்கழக தேர்வில் முதலிடம் பெற்று, அதற்காக தங்கப்பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இவர் அகில இந்திய அளவில் முதலிடத்தை பெற்றது குறிப்பிடத்தக்க சாதனை. ஜிப்மர் வழங்கும் உயர்தர பயிற்சியையும், அறுவை சிகிச்சைத் துறையில் அவர் காட்டிய தொடர்ச்சியான அர்ப்பணிப்பையும் பிரதிபலிக்கிறது.



டாக்டர் ராஜலட்சுமி தற்போது நாட்டின் முன்னணி புற்றுநோய் சிகிச்சை மற்றும் பயிற்சி நிறுவனங்களில் ஒன்றான மும்பை டாடா மெமோரியல் மருத்துவமனையில் புற்றுநோய் அறுவை சிகிச்சை துறையில் மேற்படிப்பை தொடர திட்டமிட்டுள்ளார். டாக்டர் எம். ராஜலட்சுமிக்கு ஜிப்மர் தனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டு, அவரது எதிர்கால கல்வி மற்றும் தொழில்முறை முயற்சிகளில் தொடர்ச்சியான வெற்றியை பெறவும் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளது.

மாலை எக்ஸ்பிரஸ்
MAALAI EXPRESS
மாலை நாளிதழ்
மாநிலம் பயனுற!

# ஜிப்மரில் தேசிய கை அறுவை சிகிச்சை பயிற்சி பட்டறை



புதுச்சேரி, பிப். 5-

புதுச்சேரி ஜிப்மர் எலும்பியல் அறுவை சிகிச்சை துறை சார்பில் தேசிய கை அறுவை சிகிச்சை பயிற்சி பட்டறை நடந்தது. இதில் நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் எலும்பியல் அறுவை சிகிச்சை நிபுணர்கள், பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை நிபுணர்கள், கை அறுவை சிகிச்சை நிபுணர்கள், முதுநிலை மாணவர்கள் மற்றும் மூத்த பயிற்சி மருத்துவர்கள் கலந்து கொண்டனர்.

இப்பயிற்சி பட்டறையில் பிறவியிலேயே ஏற்படும் கை குறைபாடுகள், கை தொற்று நோய்கள், காயம் தொடர்பான மேலாண்மை மற்றும் நுட்பங்கள் குறித்து விளக்கப்பட்டது. எலும்பு முறிவு மேலாண்மை அமர்வுகளில் பல்வேறு எலும்பு முறிவு குறித்து விவாதிக்கப்பட்டன. மேலும் கை கட்டிகள் மற்றும் பல்வேறு புற்றுநோய் கட்டிகள் குறித்து தெளிவான வழிமுறை அடிப்படையிலான சிகிச்சை முறைகளுடன் விவாதிக்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, பொதுவாக மேற்கொள்ளப்படும் கை அறுவை சிகிச்சைகளின் உயர்தரமான செயல்முறை காணொலி காட்சிகள் வழங்கப்பட்டு, அறுவை செயல்முறைகளின் ஒவ்வொரு படிநிலையும் அதன் நுணுக்கங்களையும் பங்கேற்பாடுகள் புரிந்து கொள்ள உதவின. இப்பயிற்சியில் மூத்த பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை நிபுணர் பாலகிருஷ்ணனுக்கு நினைவு பரிசு வழங்கப்பட்டது.

தினமலர் 75
தேசிய தமிழ் நாளிதழ்

# ஜிப்மரில் 'கை' அறுவை சிகிச்சை ஒரு நாள் பயிற்சி பட்டறை

ADDED : பிப் 05, 2026 05:53 AM



புதுச்சேரி: ஜிப்மரில், 'கை அறுவை சிகிச்சை பயிற்சி வகுப்பு - கையைப் பற்றிய அனைத்தும்' என்ற தலைப்பில், ஒரு நாள் பயிற்சி பட்டறை நடந்தது.

ஜிப்மர் எலும்பியல் அறுவை சிகிச்சை துறை சார்பில், நடந்த நிகழ்ச்சியில், வேலூர் கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி கை அறுவை சிகிச்சைத் துறைத்தலைவர் அனில் மேத்யூ, பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை நிபுணர்கள் பாலகிருஷ்ணன், கார்த்திகேயன், ஜெயக்குமார், ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி கை மற்றும் எலும்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் டெரன்ஸ் ஜோஸ் ஜெரோம்,சென்னை அப்போலோ பர்ஸ்ட்மெட் மருத்துவமனைகை மைக்ரோவாஸ்குலர் மற்றும் பொது பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை நிபுணர் சபரி கிரிஷ் அம்பட், எலும்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் பழனிவேல், ஜிப்மர் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சைத் துறை பேராசிரியர்கள் தேவி பிரசாத் மொகபாத்திரா, தினேஷ் குமார், துறைத் தலைவர் சுரேஷ் காந்தி, உதவிப் பேராசிரியர் பத்மலட்சுமி பாரதி மோகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இப்பயிற்சி பட்டறையில், பிறவியிலேயே ஏற்படும் கை குறைபாடுகள், கைத் தொற்று நோய்கள், காயம் தொடர்பான மேலாண்மை, மற்றும் நுட்பங்கள் குறித்து விளக்கப்பட்டது. எலும்பு முறிவு, கை கட்டிகள் மற்றும் பல்வேறு புற்றுநோய் கட்டிகள் குறித்து தெளிவான வழிமுறை அடிப்படையிலான சிகிச்சை முறைகள் குறித்து விவாதிக்கப்பட்டன.

நிகழ்ச்சியில், கை அறுவை சிகிச்சை கல்வி மற்றும் வழிகாட்டல் மற்றும் நோயாளி பராமரிப்பில், நீண்ட கால பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில், மூத்த பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை நிபுணர் பாலகிருஷ்ணன் கவுரவிக்கப்பட்டார்.

Link: https://www.dinamalar.com/news/puducherry/one-day-training-workshop-on-hand-surgery-at-jipmer/4143120

THE TIMES OF INDIA, CHENNAI
FRIDAY, FEBRUARY 6, 2026

# Jipmer resident tops INI-SS exam

TIMES NEWS NETWORK

**Chennai:** Dr Vignesh Durai, senior resident in the department of obstetrics and gynaecology, Jipmer (Jawaharlal Institute of Postgraduate Medical Education and Research), has secured all India first rank in the Institute of National Importance Super Speciality (INI-SS) examination. Durai completed MBBS from Stanley Medical College and pursued his MS in obstetrics and gynaecology at Jipmer. In the highly competitive INI-SS examination for the M Ch (gynaecologic oncology) course, Durai secured the top national rank. Jipmer director Dr Vir Singh Negi and faculty members congratulated Durai on the remarkable achievement, said the release. This accomplishment once again highlights Jipmer's commitment to excellence in medical education, training, and research at the national level, said the release.

தினமலர்
புதுச்சேரி | வெள்ளி | 6.2.2026

# ஐ.என்.ஐ.எஸ்.எஸ்., தேர்வில் ஜிப்மர் டாக்டர் சாதனை

**புதுச்சேரி, பிப். 6–**

ஐ.என்.ஐ.எஸ்.எஸ்., தேர்வில், ஜிப்மர் முதுநிலை பயிற்சி டாக்டர், அகில இந்திய அளவில் முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளார்.

ஜிப்மர் மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவத் துறையின் முதுநிலை பயிற்சி மருத்துவர் விக்னேஷ் துரை. இவர், டில்லியில் உள்ள அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகத்தால் நடத்தப்பட்ட தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்களின் சூப்பர் ஸ்பெஷாலிட்டி, (ஐ.என்.ஐ.எஸ்.எஸ்) தேர்வு ஜனவரி 2026ல், எம்.சி.எச். (மகளிர் மருத்துவ புற்றுநோயியல்) பாடத்திற்கான பிரிவில், அகில இந்திய அளவில் முதலிடம் பிடித்தார்.


விக்னேஷ் துரை

இவர், எம்.பி.பி.எஸ்., பட்டத்தை சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லுாரியில் பயின்று, ஜிப்மரில் மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவத்தில் எம்.எஸ்., பட்டம் பெற்று, ஜிப்மரில் தற்போது மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவத் துறையில் முதுநிலை பயிற்சி டாக்டராக பணியாற்றி வருகிறார்.

தேசிய அளவில் முதலிடம் பிடித்த அவரை ஜிப்மர் இயக்குநர் மற்றும் பேராசிரியர்கள் பாராட்டினர்.

தினமலர் 75
தேசிய தமிழ் நாளிதழ்

# ஐ.என்.ஐ.எஸ்.எஸ்., தேர்வில் ஜிப்மர் டாக்டர் சாதனை

ADDED : பிப் 06, 2026 05:34 AM



புதுச்சேரி: ஐ.என்.ஐ.எஸ்.எஸ்., தேர்வில், ஜிப்மர் முதுநிலை பயிற்சி டாக்டர், அகில இந்திய அளவில் முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளார்.

ஜிப்மர் மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவத் துறையின் முதுநிலை பயிற்சி மருத்துவர் விக்னேஷ் துரை. இவர், டில்லியில் உள்ள அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகத்தால் நடத்தப்பட்ட தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்களின் சூப்பர் ஸ்பெஷாலிட்டி, (ஐ.என்.ஐ.எஸ்.எஸ்) தேர்வு ஜனவரி 2026ல், எம்.சி.எச். (மகளிர் மருத்துவ புற்றுநோயியல்) பாடத்திற்கான பிரிவில், அகில இந்திய அளவில் முதலிடம் பிடித்தார்.

இவர், எம்.பி.பி.எஸ்., பட்டத்தை சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் பயின்று, ஜிப்மரில் மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவத்தில் எம்.எஸ்., பட்டம் பெற்று, ஜிப்மரில் தற்போது மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவத் துறையில் முதுநிலை பயிற்சி டாக்டராக பணியாற்றி வருகிறார்.

தேசிய அளவில் முதலிடம் பிடித்த அவரை ஜிப்மர் இயக்குநர் மற்றும் பேராசிரியர்கள் பாராட்டி னர்.

Link: https://www.dinamalar.com/news/puducherry/jipmer-doctors-achievement-in-iniss-exam/4143848

இந்து தமிழ் திசை

# எய்ம்ஸ் சூப்பர் ஸ்பெஷாலிட்டி தேர்வில் ஜிப்மர் முதுநிலை பயிற்சி மருத்துவர் முதலிடம்



**புதுச்சேரி:** ஜிப்மர் முதுநிலை பயிற்சி மருத்துவர் விக்னேஷ் துரை, எய்ம்ஸ் சூப்பர் ஸ்பெஷாலிட்டி தேர்வில் முதலிடம் பிடித்துள்ளார்.

டெல்லியில் உள்ள அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகத்தால் (AIIMS), தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்களின் சூப்பர் ஸ்பெஷாலிட்டி (INI-SS) தேர்வு நடந்தது. கடந்த ஜனவரி 2026 அமர்வில் ஜிப்மர் மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவத் துறையின் முதுநிலை பயிற்சி மருத்துவரான விக்னேஷ் துரை பங்கேற்றார். இவர் அகில இந்திய அளவில் முதல் இடத்தை (AIR I) பெற்றுள்ளார்.

டாக்டர் விக்னேஷ் துரை , தனது எம்பிபிஎஸ் பட்டத்தை சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் (2013-2019) முடித்தார். ஜிப்மரில் மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவத்தில் தனது எம்எஸ் பட்டத்தைப் பெற்றார் (2020-2022). அவர் தற்போது ஜிப்மரின் மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவத் துறையில் முதுநிலை பயிற்சி மருத்துவராகப் பணியாற்றி வருகிறார்.

எம்சிஎச் (மகளிர் மருத்துவ புற்றுநோயியல்) பாடத்துக்கான மிகவும் போட்டி நிறைந்த எய்ம்ஸ் சூப்பர் ஸ்பெஷாலிட்டி (INI-SS) தேர்வில் டாக்டர் விக்னேஷ் துரை தேசிய அளவில் முதல் இடத்தைப் பெற்றுள்ளார் என்று ஜிப்மர் தெரிவித்துள்ளது.

Link: [https://www.hindutamil.in/news/education/jipmer-postgraduate-resident-doctor-secures-first-rank-in-aiims-super-speciality-examination](https://www.hindutamil.in/news/education/jipmer-postgraduate-resident-doctor-secures-first-rank-in-aiims-super-speciality-examination)

நமது முரசு
NAMATHU MURASU
தமிழ் மக்களின் நாடித்துடிப்பு
மாலை நாளிதழ்


# சூப்பர் ஸ்பெஷாலிட்டி தேர்வில் ஜிப்மர் பயிற்சி மருத்துவர் தேசிய அளவில் முதலிடம்

**புதுச்சேரி, பிப். 5-** புதுவை ஜிப்மர் மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவத் துறையின் முதுநிலை பயிற்சி மருத்துவரான டாக்டர் விக்னேஷ் துரை புதுடெல்லியில் உள்ள அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகத்தால் (AIIMS) நடத்தப்பட்ட தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்களின் சூப்பர் ஸ்பெஷாலிட்டி (INI-SS) தேர்வு ஜனவரி 2026 அமர்வில் அகில இந்திய அளவில் முதல் இடத்தை (AIR1) பெற்றுள்ளார் என்பதை பெருமையுடன் அறிவிக்கிறது.

டாக்டர் விக்னேஷ் துரை தனது எம்.பி.பி.எஸ். பட்டத்தை சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் (2013-2019) முடித்துள்ளார்

மேலும் ஜிப்மரில் மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவத்தில் தனது எம்.எஸ். பட்டத்தை (2020-2022) பெற்றார். அவர் தற்போது ஜிப்மரின் மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவத் துறையில் முதுநிலை பயிற்சி மருத்துவராக பணியாற்றி வருகிறார்.

எம்.சி.எச். (மகளிர் மருத்துவ புற்றுநோயியல்) பாடத்திற்கான மிகவும் போட்டி நிறைந்த INI-SS தேர்வில் டாக்டர் விக்னேஷ் துரை தேசிய அளவில் முதல் இடத்தைப் (AIR1) பெற்றுள்ளார்.

இது அவரது கல்வித் திறன், மருத்துவத் திறமை மற்றும் அர்ப்பணிப்புடன் கூடிய பயிற்சியைப் பிரதிபலிக்கிறது.

ஜிப்மரின் இயக்குனர் மற்றும் ஆசிரியர்கள் டாக்டர் விக்னேஷ் துரைக்கு இந்த குறிப்பிடத்தக்க சாதனைக்காக வாழ்த்து தெரிவித்ததுடன், அவரது எதிர்கால கல்வி மற்றும் தொழில்முறை முயற்சிகளில் தொடர் வெற்றி பெற வாழ்த்தியுள்ளனர்.

இந்த சாதனை தேசிய அளவில் மருத்துவக்கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சியில் சிறந்து விளங்குவதற்கான ஜிப்மரின் அர்ப்பணிப்பை மீண்டும் ஒருமுறை எடுத்துக் காட்டுகிறது.

இந்த தகவலை ஜிப்மர் மக்கள் தொடர்பு அதிகாரி தெரிவித்துள்ளார்.



டாக்டர் விக்னேஷ் துரை

## Dinamalar - World's No 1 Tamil News Website's post

Dinamalar - World's No 1 Tamil News Website
1d ·

முதலிடம்
#JIPMER|#postgraduate|#doctor|#Vigneshdurai|#firstrank|#AIIMS|#superspecialty|#examination
https://www.dinamalar.com




https://www.facebook.com/Dinamalardaily/posts/%E0%AE%AE%E0%AF%81%E0%AE%A4%E0%AE%B2%E0%AE%BF%E0%AE%9F%E0%AE%AE%E0%AF%8D-jipmerpostgraduatedoctorvigneshduraifirstrankaiimssuperspecialtyexamina/1437783518393626/